லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-8 ஜனவரி-2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai






# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து

## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்




- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்



- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

என்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
என்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# சுற்றுச் சூழலுக்கு ஆபத்து!

பிளாஸ்டிக்குகளில் நூற்றுக்கணக்கான பொருட்கள் உள்ளது. இதில், 95 சதவீத பிளாஸ்டிக்குகளை மறு சுழற்சி செய்ய முடியும். அவற்றுக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை. ஆனால், ஒரு முறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறிந்து விடும் பிளாஸ்டிக் கேரி பேக், கப், பாட்டில், ஷீட்கள் போன்றவற்றால் தான் சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்து ஏற்படுகிறது. தனி மனித சுகாதாரத்துக்கும் பெரும் கேடாக உள்ளது. இந்த வகையில் மக்காத 5 சதவீதம் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் உற்பத்தியாளர்கள் மற்ற 95 சதவீத பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி அந்த பிளாஸ்டிக் பொருட்களை தூக்கி வீசுவதன் விளைவாக பாதாள சாக்கடைகளில் அடைப்பு ஏற்படுகிறது. அதனால், கொசு உற்பத்தி ஏற்பட்டு நோய் பரவும் சூழல் உருவாகிறது. பிளாஸ்டிக் பொருட்களால் நீர் நிலைகள் மாசுபடுகிறது. நிலத்தடி நீரையும் மாசு ஏற்படுவதால், அந்த தண்ணீரை பயன்படுத்தும் பொது மக்களுக்கு பல்வேறு விதமான நோய்கள் உண்டாகிறது.

திடக்கழிவு மேலாண்மையில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிகளவு கலக்கிறது. ஆரம்ப கட்டத்தில் திடக்கழிவுகளை எடுத்து சென்று விவசாயிகள் உரமாக பயன்படுத்துகின்றனர். இப்போது, பிளாஸ்டிக் பொருட்கள் கலப்பதால் திடக்கழிவுகளை பயன்படுத்துவதை விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர். பிளாஸ்டிக் கப்பில் டீ மற்றும் பிளாஸ்டிக் பிளேட்டில் சாப்பாடு போன்ற சூடான பொருட்களை வழங்குவதால் மக்களுக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தடுக்கும் வகையில் எல்லா துறைகளும் இணைந்து ஒத்துழைக்க வேண்டியது முக்கியம். ஏற்கனவே, பிளாஸ்டிக் தடை 6 மாதத்திற்கு முன்னர் கால அவகாசம் முதல்வர் வழங்கி விட்டார். இனியும், 15 நாட்கள் கால நீட்டிப்பு கொடுப்பதால் எந்த பயனும் ஏற்பட போவதில்லை.

திடக்கழிவு மேலாண்மையில் ஈடுபடுவோருக்கு எத்தனை மைக்ரான் என்பது குறித்து கண்டுபிடிக்க வாய்ப்பில்லை. ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருளை மீண்டும் பயன்படுத்த முடியாது. எனவே, அந்த பிளாஸ்டிக் பொருட்களை பிரித்தெடுத்து கொண்டு வருவதில் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். எனவே, மறு சுழற்சி செய்ய முடியாத பொருட்களுக்கு மக்கள் நலன் கருதி தடை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் நலமுடன் வாழ, சுற்றுச்சூழல் கலப்பில்லாத நல்ல காற்றை சுவாசிக்க விவசாயம் செழிக்க பிளாஸ்டிக் மீதான தடை உதவும். தற்போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பவர்களிடம் 40 சதவீதம் பேர் 35 வயதுக்குள்ளானவர்கள் தான். இதற்கு பிளாஸ்டிக்கும் ஒரு காரணம், பிளாஸ்டிக்கிற்கு தடை விதிப்பதன் மூலம் மக்களின் ஆயுட்காலம் அதிகரிக்கும்.

– ஆசிரியர்




# பத்திரிகையாளர்களுக்கு இது மோசமான காலம்

பத்திரிகை துறை என்பது சவால் களும் சந்தோஷமும் நிறைந்த துறைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் உலகின் சில பகுதி களில் பத்திரிகையாளர்கள் வேட்டை யாடப்படுகிறார்கள். கொல்லப்படுகிறார்கள். சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அவர்கள் எப்போதும் இல்லாத வகை யில் மோசமான பகையை சந்தித்து வருகிறார்கள் என 'ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸ்' (ஆர்எஸ்எப்) என்ற அமைப்பு கூறியுள்ளது. கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் கொலைகளும் பிணைக்கைதிகளாக பிடிப்பதும், ஆளையே காணாமல் போகச் செய்வதும் அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

2018-ம் ஆண்டில் 80 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 61 சதவீதம் பேரை குறிவைத்து நடந்த தாக்குதலில் 39 சதவீதம் பேர் கொல்லப்பட்டனர். உலகம் முழுவதும் 348 நிருபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 60 பேர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர் என ஆர்எஸ்எப் கூறியிருக்கிறது. ஆப் கானிஸ்தான் தான் ரொம்ப மோசம். முதலிடத்தில் இருக்கிறது. இந்தியா 5-வது இடத்தில் இருக்கிறது. இங்கு 6 பத்திரிகையாளர்கள் கடந்த ஆண்டில் கொல்லப்பட்டனர். போர் நடக்காத நாடு களில்தான் பத்திரிகையாளர்கள் கொல்லப் படுவது அதிகமாக இருக்கிறது. முதன் முறையாக அமெரிக்காவில் இந்த ஆண்டு 6 பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டுள்ளனர். கடந்த ஜூனில் மேரிலாண்டில் பத்திரிக்கை அலுவலகத்திலேயே 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் 2 பேர் வடக்கு கரோலினாவில் மோசமான வானிலை தொடர்பான செய்தியை சேகரிக்கும்போது பலியாயினர். சிறையில் அடைக்கப்பட்டுள்ள பத்திரிகை யாளர்களில் பாதிக்கு மேல் சீனா, எகிப்து, துருக்கி, ஈரான், சவுதி அரேபியா நாடுகளில் இருக்கிறார்கள்.

பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் கமிட்டியும் (சிபிஜே) இதேபோன்ற அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அதன்படி, 2018-ல் மொத்தமுள்ள 53 பத்திரிகையாளர்களில் 34 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 47 பேர் கடந்த ஆண்டில் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் இது மிகவும் அதிகமாகும். இதிலும் ஆப்கானிஸ்தான் முதலிடத்தில் இருக்கிறது. அங்கு இந்த ஆண்டில் மட்டும் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ரவுடி அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பேராசை பிடித்த தொழிலதிபர்கள் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு எதிராக வெறுப்பை தூண்டும் வகையில் பேசுவதால்தான் பத்திரிகையாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என ஆர்எஸ்எப் அமைப்பின் பொதுச் செயலாளர் கிறிஸ்டோப் டெலாய்ர் கூறியிருக்கிறார்.

ஒரே ஆறுதலான விஷயம், இந்த ஆண்டில் உள்நாட்டுக் கலவரம், போர் நடக்கும் பகுதிகளில் இறந்த பத்திரிகை யாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. சிரியாவிலும், ஏமனிலும் போர் நடந்தபோதும் இந்த நிலை. உண்மையில் போர் நடக்கும் பகுதிகளில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவ தில்லை என்பதும் அந்தப் பகுதிகளுக்குப் போகாமல் பத்திரிகையாளர்கள் தவிர்ப்பதும்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம். அப்படியும் இந்த ஆண்டில் இதுவரை 11 பேர் இறந்துள்ளனர்.

ஆர்எஸ்எப் மற்றும் சிபிஜே அறிக்கைகளில் வித்தியாசம் இருக்கலாம். அது இங்கே பிரச்சினை இல்லை. ஆனால், பத்திரிகையாளர்களை சுட்டுக் கொல்லும் நாடுகள் மற்றும் தீவிரவாத தலைவர்களை கேள்வி கேட்க யாருமில்லை என்பதுதான் பிரச்சினை. உலக அளவில்




இந்தக் கொடுமையை தட்டிக் கேட்க பெரிய தலைவர்கள் யாருமில்லை. ஒருவகையில் பார்த்தால், உலகத் தலைவர்கள் பத்திரிகையாளர் களை மோசமாக தாக்கிப் பேசுவதால்தான் இந்த அளவுக்கு தாக்குதல் நடத்த யாருக்கும் தைரியம் வருகிறதோ என்ற சந்தேகமும் இருக்கிறது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஒருபக்கம் பத்திரிகை சுதந்திரத்தின் அவசியம் குறித்து பேசுகிறார். மறுபக்கம் பொய் செய்திகள் என்றும் பத்திரிகையாளர்களை மக்களின் விரோதிகள் என்றும் தினமும் வசைபாடுகிறார். துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் கடந்த அக்டோபர் மாதம் சவுதி தூதரகத்தில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜமால் கஸோகி குறித்து தினமும் புதுப்புது தகவல்களை வெளியிட்டு வருகிறது துருக்கி அரசு. இதனால் இந்த செய்தி சர்வதேச அளவில் தலைப்பு செய்தியாக இருக்கிறது. பத்திரிகையாளர்கள் மீது பாசம் எல்லாம் கிடையாது துருக்கிக்கு. அரசியல் லாபத்துக்குக்காகத்தான் இதை செய்து வருகிறது.

படுகொலைகள் ஒருபுறம் இருக்க, மேற்கத்திய ஜனநாயக நாடுகளிலும் மற்ற பகுதிகளிலும் பத்திரிகையாளர்கள் தங்கள் கடமையைச் செய்வதே கடினமாகி வருகிறது. தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காகவும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் காரணமாகவும் இந்த நிலை. பத்திரிகையாளர்கள் சுட்டுக் கொல்லப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பெரிய அரசியல் தலைவர்கள் தலையிட்டால்தான் முன்னேற்றம் ஏற்படும்.

– கனகதுர்கா


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 இதழ்-8 ஜனவரி-2019

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.(Hons).

**ஆசிரியர் குழு**
V.அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

**நிர்வாக ஆசிரியர்**
வீ.சிவசங்கரன், B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசீ ஈஸ்வர் தென்காசி, N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி
குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன்
சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி
நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

**சட்ட ஆலோசகர்கள்**
M.குணசீலன் B.Com., M.L.,
M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : M.சந்தோஷ்சிவன்

இதழ் வடிவமைப்பு: ஆப்பிள் பிரிண்டர்ஸ்



நிர்வாக ஆலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# ரிசர்வ் வங்கியின் தவறான கொள்கைகள்!

பணவியல் கொள்கையை வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், நிதிசார் துறைகளை முறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல், வட்டி விகிதம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்; உற்பத்தித் துறைகளுக்கு போதுமான அளவு கடன் வழங்குவது. அரசுடைமை வங்கிகளை ரிசர்வ் வங்கி நேரடியாகத் தணிக்கை செய்வது, Prompt Corrective Action(PCA) என்று சொல்லக்கூடிய "உரியகால திருத்த நடவடிக்கை"யின்படி வலுவற்ற வங்கிகளைக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவது, ரொக்கத்தை வணிக வங்கிகளுக்குக் கடனாகத் தந்து, அந்த வட்டியிலிருந்து வருமானம் ஈட்டுவது.

அத்துடன், அரசின் கடன் பத்திரங்களை விற்றும் வருவாய் ஈட்டுவது போன்றவை ரிசர்வ் வங்கியின் பொதுவான செயல்பாடுகள். மேலும் ரூபாய் நோட்டுகளை அச்சிடும் பணி ரிசர்வ் வங்கியுடையது. அது அச்சிடும் ரூபாய் நோட்டுகளின் மொத்த முகமதிப்பைக் கூட்டி, அதிலிருந்து அச்சுக்கூலி, கரன்சி விநியோகச் செலவு ஆகியவற்றைக் கழித்தால் கிடைக்கும் தொகை 'உபரி' வருமானமாகும்.

இந்த உபரி வருமானத்தில் ஒரு பகுதியைத் தனது அவசரத் தேவைகளுக்காகவும், சொத்து வளர்ச்சி செலவுக்காகவும் ரிசர்வ் வங்கி ஒதுக்கிக் கொள்கிறது. எஞ்சிய 'உபரி' அரசுக்கு வழங்கப் படுகிறது. இந்த பணிகளை செய்ய ரிசர்வ் வங்கிக்கு சுய அதிகாரம் உள்ளது. மத்திய அரசின் முனைப்பு நிதிக்கொள்கையான நேர்முக மற்றும் மறைமுக வரி மேலாண்மை மூலம் வரும் வருவாயில் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் ஆரோக்கியம் மற்றும் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்குதல் போன்ற நாட்டின் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துதல் அரசின் முக்கிய கடமை. ரிசர்வ் வங்கி துணையுடன் பணவியல் கொள்கையோடு நிதிக்கொள்கையை செயல் படுத்தும் பொறுப்பும் மத்திய அரசுக்கு உள்ளது.

21 உறுப்பினர்கள் கொண்ட மத்திய நிர்வாக குழு என்று சொல்லக்கூடிய Basel III norms-படி ரிசர்வ் வங்கி செயல்படுகிறது. உலகளவில் மூலதன ஆதாய விகிதம் 8% ஆக இருந்து வருகிறது. இது வங்கிகளுக்குள் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட சீர்திருத்த தொகுப்புகளை அறிமுகப்படுத்தியது. கடன் நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், வங்கிகள் முறையான அந்நிய செலவினங்களை பராமரிக்கவும் குறைந்தபட்ச மூலதன தேவை களை பூர்த்தி செய்யவும் உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் ஒவ்வொரு வங்கியும் தாங்கள் கொடுத்த கடனின் தன்மையைப் பொறுத்து Weighted Average Risk முறையில் 9% மூலதன ஆதாய விகிதமாக (Capital Adequacy) வைத்திருக்க வேண்டும். இது குறைந்தால் உடனடியாக அரசாங்கம் போதிய அளவு மூலதனத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும். இந்தியன் வங்கி சிக்கலுக்குள்ளானபோது அரசாங்கத்தால் மூலதன ஆதாய விகிதம் புதுப்பிக்கப்பட்டு வலுவான நிலைக்குக் கொண்டுவரப்பட்டது ஓர் உதாரணம்.

அதேபோல் சில ஆண்டுகளுக்கு முன் சிட்டி வங்கியின் விகிதம் குறைந்த போது தனது வெளிநாட்டு சொத்துகளை விற்று உடனடியாக 9% க்கு கொண்டு வந்தது. ஆகையால், இந்த விகிதத்தை 8% ஆக குறைக்க என்று மத்திய அரசு வலியுறுத்துகிறது. இவ்வாறு குறைக்கப்படும்போது ரிசர்வ் வங்கியிடம் இருக்கும் அதிகமான கையிருப்பை நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறது. ரிசர்வ் வங்கி இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. பொதுவாக மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் ஒரு குடும்பம் போல செயல்படும் கடமைப்பட்டவர்கள். மத்திய அரசின் நிதிக் கொள்கையும் (fiscal policy) ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கையும் (Monetary Policy) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இரட்டை மாட்டு வண்டி போல. எனவே ரிசர்வ் வங்கியும் மத்திய அரசாங்கமும் இணக்கமான ஓர் உறவை ஏற்படுத்திக் கொண்டு செயல்படும்போது தான் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியும்.

தனது அதிகார எல்லையில் அரசு தலையிடக்கூடாது என எதிர்பார்க்கும் ரிசர்வ் வங்கி, அரசுடைமை வங்கிகளை மேம்படுத்த




தமக்கு மேலும் அதிகாரங்கள் தேவை, வருமானத்தில் அதிக அளவு அரசு கேட்கக்கூடாது மற்றும் கடன் வழங்குவதில் அரசு தலையீடு இருக்கக்கூடாது என்று எதிர்ப்பார்க்கிறது. ஆனால், அரசோ ரிசர்வ் வங்கிக்கு வரம்புமீறிய சுதந்திரம் அளிக்கப்பட்டுவிட்டதோ என்று நினைக்கிறது. அதிகக் கடன் கொடுத்துவிட்டு வசூலிக்க முடியாமல் திணறும் வங்கிகள் விஷயத்தில், உடனடித் திருத்த நடவடிக்கை மேற்கொண்டு கடன் வழங்க கட்டுப்பாடுகளை விதிக்கிறது ரிசர்வ் வங்கி. இது நாட்டின் தொழில் வளர்ச்சியை வெகுவாக பாதிக்கும். சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் விதிமுறைகள் கடுமையானதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறு, குறு தொழில் துறையினர் அமைப்பு சாரா நிதி நிறுவனங்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்க நேரிட்டுள்ளது வேதனையான விஷயம். எனவே வங்கியல்லாத நிதி நிறுவனங்களுக்கு உதவுவதில் ரிசர்வ் வங்கி தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும், பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி., ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை இயல்பு நிலைக்குத் திரும்ப, கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும் என்றும் அரசு விரும்புகிறது. ரிசர்வ் வங்கியின் உபரி நிதியில், வங்கிகளின் மூலதனத்தை உயர்த்தி, அவற்றின் சொத்து மதிப்பை அதிகரித்து, சந்தையில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தவும் மத்திய அரசு விரும்புகிறது.

ரிசர்வ் வங்கி தேவையான சமயங்களில் வங்கிகளுக்கு ஆலோசனை சொல்லவும், அவ்வப்போது தணிக்கை செய்யவும், தனது சார்பில் ஒவ்வொரு வங்கியிலும் இயக்குநரை நியமனம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. ரூபாய் மதிப்பின் சரிவு, பங்குச் சந்தை வீழ்ச்சி, ஐஎல் அண்ட் எப்எஸ் பிரச்சினையால், நிதிச் சந்தையில் குறைந்துள்ள பணப்புழக்கம் போன்ற சமீபத்திய பிரச்சினைகளில், ரிசர்வ் வங்கி தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை என்ற அதிருப்தியில் மத்திய அரசு உள்ளது.

மேலும், விஜய் மல்லையா, நீரவ் மோடி போன்ற பலருக்கு வங்கிகள் கொடுத்த கடனில் வாராக்கடனாக மாறியவை ஆயிரக்கணக்கான கோடிகள். இவற்றையெல்லாம் ஆரம்பம் முதலே ரிசர்வ் வங்கி செவ்வனே கண்காணித்து, நடவடிக்கை எடுத்திருந்தால் பிரச்சினையே இருந்திருக்காது. தும்பை விட்டுவிட்டு தற்போது வாலைப் பிடிப்பது போல, முன்பே கடன் கொடுப்பதையும், வங்கி மோசடிகளையும் கண்காணிக்காமல் விட்டுவிட்டு இப்போது வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து நெருக்கடி ஏற்படுத்துகிறது.

**- அகிலாண்டேஸ்வரி**

# சட்டவிரோத நடவடிக்கையில் அந்நிய நாடுகள்



இந்திய நிலப்பகுதிக்குள் உரிய சட்ட அனுமதியின்றித் தங்கியிருப்பவர்கள் தேசப் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என்று இந்தியத் தரைப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத் கருத்து தெரிவித்திருப்பது வங்கதேசத்தில் கலக்கத் தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியாவுக்குள்தான் வங்கதேசிகள் சட்டவிரோதமாகக் குடியேறிவிட்டார்கள் என்றே பெரும்பாலோர் கருதுகின்றனர். உண்மையில் இந்தியர்களும் வங்கதேசத்துக்குள் சட்டபூர்வமாகவோ அல்லாமலோ தங்கியிருந்து வேலை செய்து சம்பாதிக்கின்றனர். 2009-ல் வங்கதேச அரசு எடுத்த கணக்கின்படி 5 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வங்கதேசத்தில் உள்ளனர். ஐக்கிய அரபு சிற்றரசு, அமெரிக்கா, சவுதி அரேபியா, கத்தார், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அடுத்து இந்தியாவுக்கு மாதந்தோறும் அதிகப் பணம் வங்கிகள் மூலம் தரும் நாடு வங்கதேசமாக இருக்கிறது. பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள், தொழில் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள் என்று பலவற்றிலும் இந்தியர்கள் வேலை செய்கின்றனர். பட்டம் மற்றும் பட்டயம் பெற்றவர்களும் பொறியாளர்களும் வங்கதேசத்தில் வேலை செய்து அதிக ஊதியம் ஈட்டி, அதில் பெரும் பகுதியைத் தாய்நாட்டுக்கு அனுப்புகின்றனர். வங்கதேசிகளோ கட்டுமானத் தொழில், அடித்தளக் கட்டமைப்பு ஆகியவற்றில் குறைந்த ஊதியத்துக்கு வேலை செய்து தங்களுடைய அவசியத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்துகொள்கின்றனர். தாய்நாட்டுக்கு எதுவும் அனுப்ப முடிவதில்லை. இரு பிரிவினருக்கும் இடையே இதுதான் வேறுபாடு.

தேசிய மக்கள் பதிவேடு என்பது உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் நடைபெறும் நிர்வாக நடவடிக்கை, அரசியல் சூதாட்டம் அல்ல என்று இந்தியாவின் ஆளும் தரப்பு கூறுகிறது. ஆனால், ஆளும் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் வங்கதேசிகளுக்கு எதிராக விஷம் கக்கும் கருத்துகளைப் பொதுவெளியில் விதைத்துவருகின்றனர். இது இரு நாடுகளுக்கு இடையே நிலவும் நல்ல உறவைக்கூட நாசப்படுத்திவிடும்.

அசாமில் தேசிய மக்கள் பதிவேட்டில் இடம்பெறாதவர்கள், தாங்கள் எங்கிருந்து வந்தார் களோ அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று பிரதமர் மோடி, வங்கதேச அரசுக்கு உறுதி கூறியிருக்கிறார். தேசிய மக்கள் பதிவேடு என்பது இந்தியாவின் உள் விவகாரம் என்று கூறி, வங்கதேசம் இதுவரை அதிகாரபூர்வமாக மவுனம் கடைப்பிடிக்கிறது. மியான்மரிலிருந்து அகதிகளாக வந்துவிட்ட 10 லட்சம் ரோஹிங்கியாக்களைப் பராமரிக்கவே நிதி வசதியும் வேறு கட்டமைப்புகளும் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில், இந்தியாவும் 'அந்நியர்கள்' என்று முத்திரை குத்தி வங்காளி முஸ்லிம்களைத் திருப்பி அனுப்பினால் வங்கதேசத்தால் தாங்க முடியாது.

பக்கத்து நாடுகளுடனான உறவுக்கு முன்னுரிமை என்ற கொள்கையோடுதான் பிரதமர் மோடி தனது நிர்வாகத்தைத் தொடங்கினார். அவருடைய ஆட்சிக்காலத்தின் நடுவில் அவர் விரும்பியதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்பட்டுவிட்டன. இந்தியாவின் பிரிக்க முடியாத நண்பன் என்று கருதப்பட்ட நேபாளம் இப்போது சீனத்தின் நெருங்கிய நண்பனாகிவிட்டது. 2015-ல் நேபாளத்துக்குச் சென்ற அத்தியாவசியப் பண்டங்களை மாதேசிகள் தடுத்ததால், நேபாளத்தில்

கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்திய அரசு அதை வேடிக்கை பார்த்ததால் நிலைமை முற்றியது. சீனத்தின் துறைமுகங்கள் டியான்ஜின், ஷென்ஷென், லியான்யுங்காங், ஜான்ஜியாங் ஆகியவையும், நிலத் துறைமுகங்கள் லான்ஷு, லாசா, ஜிகட்சி ஆகியவையும் இப்போது நேபாளத்துக்கு உணவு, மருந்து, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களை வழங்குகின்றன. இதனால், வர்த்தகத்தில் நேபாளத்துடன் இந்தியாவுக்கிருந்த ஏகபோகம் முடிவுக்கு வந்துவிட்டது.

பூடானுக்கு சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்காகத் தந்த மானியத்தை இந்திய அரசு 2013-ல் விலக்கிக் கொண்டது. அது இருதரப்பு உறவில் முதல் நெருடலை ஏற்படுத்தியது. டோக்லாமில் சீனப் படை குவிப்பால் அந்நாட்டின் மீது பூடானுக்கு ஐயம் அதிகரித்தது. அதை எதிர்கொள்ள இந்தியா எடுத்த நடவடிக்கைகள் மீது பூடானுக்குத் திருப்தியில்லை. தன்னுடைய நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்று அது உணர்த்தியிருக்கிறது. வங்கதேசம்-பூடான்-இந்தியா-நேபாளம் இடையிலான மோட்டார் வாகன ஒப்பந்தத்திலிருந்து பூடான் விலகிவிட்டது.

இந்தியா-சீனா இடையிலான அதிகாரப் போட்டிதான் இலங்கை, மாலத்தீவுகளின் உள்நாட்டு அரசியல் நிகழ்வுகளில் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. தெற்காசியாவில் இந்தியாவின் கொல்லைப்புறத்திலேயே சீனா தன்னுடைய செல்வாக்கை வளர்த்துவருகிறது. இந்நிலையிலும் இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தோழனாக இருப்பது வங்கதேசம் மட்டுமே. பாதுகாப்பு விஷயத்தில் இந்தியாவுக்கு வங்கதேசம் முழு



ஒத்துழைப்பு அளிக்கிறது. “வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஜிபி) ஒத்துழைப்பு காரணமாகவே ஊடுருவல்காரர்களை ஒடுக்க முடிந்தது” என்று இந்திய எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) தலைவர் கே.கே.சர்மா பாராட்டியிருக்கிறார். “இந்திய அரசுக்கு எதிராகப் போராடும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த போராளிகளின் மறைவிடங்களும் பயிற்சிக் களங்களும் வங்கதேசப் படைகளின் உதவியுடன் அழிக்கப்பட்டுவிட்டன” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வங்கதேசத்துடன் இந்தியாவின் வருடாந்திர விற்றுமுதல் மதிப்பு ரூ.63,000 கோடி. தெற்காசியாவிலேயே மிகப் பெரிய வணிகக் கூட்டாளி வங்கதேசம்தான். அத்துடன் இல்லாமல் இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களுக்கும் பிரதான நிலப் பகுதிகளுக்கும் நேரடி நிலவழித் தொடர்புக்குத் தனது சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் பயன்படுத்த அனுமதிக்கிறது வங்கதேசம். அத்துடன் சிட்டகாங், மோங்லா துறைமுகங்கள் வழியாக வட கிழக்கு மாநிலங்களுக்குச் சரக்குகளை இந்தியாவால் அனுப்ப முடிகிறது. தீஸ்தா நதிநீர்ப் பகிர்வில்தான் இன்னமும் சுமுக முடிவு ஏற்படாமல் இருக்கிறது. வங்கதேசம் செய்யும் ஏற்றுமதிகள் மீது காப்பு வரி போடுவதில்லை. ஆனால், வேறுவகைத் தடைகளை இந்திய அரசு விதிக்கிறது. எல்லையில் வங்கதேசிகளை, இந்திய எல்லைப் படை அடிக்கடி சுட்டுக் கொல்கிறது. இவையெல்லாம் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள்.

தேசிய மக்கள் பதிவேடுதான் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் நிலவும் சமநிலையைக் குலைக்கக் கூடிய ஆபத்தாக உருவெடுத்துள்ளது. இந்த மாத இறுதியில் வங்கதேசத்தில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் பிரச்சாரத்தில் எதிர்க் கட்சிகள் நிச்சயம் இவற்றையெல்லாம் பேசும். அந்நியர்கள் என்று அடையாளம் கண்டவர்களை வங்கதேசத்துக்கு வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்புவது அரசியல்ரீதியாகப் புத்திசாலித்தனமான செயல் அல்ல என்பது மட்டுமல்ல. இது வங்கதேசத்தில் மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய விவகாரம்!

– ஆசிரியர்

முனைவர் ஆ.மவுரியன்



வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(15)



# அம்புஜம்மாள்

## கள்ளுக்கடை மறியல், அன்னிய துணி மறுப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்

**தீய சக்தி ஓங்கிவிட்டது. நம் நாட்டில் மட்டுமல்ல. உலகம் முழுவதும் காணும் காட்சிகள் அனலாய்ச் சுடுகின்றன. இந்த உலகின் எதிர்காலம் என்ன?**

அவரது அக்கா இறந்தார். அதற்கு அவரை ராசியில்லாதவர் என்று பழித்தனர். வெகு நாட்கள் கழித்து பிறந்த தம்பியைக் கொஞ்சி மகிழ்வதில் கூட இவர்களுக்கு பங்கில்லை. தனிமைப் படுத்தப்பட்டார். பன்னிரண்டு வயதில் திருமணம். பதினைந்து வயதில் குழந்தை. இதுதான் அன்றைய வாழ்க்கை.

அவர்கள் வாழ்க்கையிலும் மாறுதல்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட ஆரம்பித்தன. வீட்டுக்கருகில் இருந்த ஓர் மாதர் சங்கத்தில் சேர்ந்தார். உலகப் போர் நடக்கும் பொழுது ஜவான்களுக்கு துணிகள், மருந்துகள் சேகரித்து அனுப்பும் முயற்சியில் இவரும் சேர்ந்து கொண்டார்.

இதே போன்று கார்கில் போர் நடக்கும் பொழுது நாங்கள் உதவிகள் செய்திருக்கின் றோம். அம்புஜம்மாளுக்கு மீண்டும் சோதனை ஏற்பட்டது. முதலில் காசநோய் வந்தது. தம்பியும் அடிபட்டு ஊனமானான். பெற்றவளும் இதய நோயால் படுத்துவிட்டார்கள் அக்குடும்பத்திற்கு ஓர் ஆறுதல்மட்டும் கிடைத்தது. தந்தை அட்வொகேட் ஜெனெரலானார்

அம்புஜம்மாளின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படக் காரணமாயிருந்த ஓர் நிகழ்வு நடந்தது. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்திஜி விடுதலைப் போராட்டத்தைத் துவக்கியிருந்தார். சென்னைக்கு வந்த பொழுது இவர்கள் வீட்டில்தான் தங்கினார். அவருடைய எளிமை, அன்பு, கனிவான பேச்சு அம்புஜம்மாளைக் கவர்ந்தது. சமுதாய அக்கரையையும் அதன்மேன்மைக்குப் பணிசெய்யவும் விதையூன்றப்பட்டது.

மேலும் அவர்களைச் சமுதாயத்தில் நெருங்க வைக்க இரு கசப்பு சம்பவங்கள் நடந்தன. இந்தியர்களுக்கு சுயாட்சி என்ற போராட்டத்தைத் தொடக்கிய அன்னிபெசண்ட் அம்மையாரை பிரிட்டீசாரால் கைது செய்ய முயன்ற பொழுது வீட்டுக் காவலில் வைக்க அம்புஜம்மாளின் தந்தைதான் ஆலோசனை கூறினார்.

மாதர் சங்கப் பெண்மணிகள் சேர்ந்து காலையில் பக்திபாடல்களைப் பாடிக்கொண்டு சுற்றி வருவர். பக்திப் பாடலுடன் தேசிய விடுதலைப் பாடல்களும் பாடப்பட்ட பொழுது அந்தப் பெண்களைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவரான அம்மையாரை மட்டும் பெரிய இடத்துப் பெண் என்று கைது செய்யவில்லை. இந்த சலுகையை வெறுத்தார்.

இப்பொழுது நடப்பதென்ன ? பெரியவர்களின் பெயரைச் சொல்லியே எத்தனை மோசடிகள் நடக்கின்றன. இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் காரணமான தந்தையின் மேல் கோபம் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினார். சிற்றப்பா வீட்டில் தங்கினார்.

தந்தை ஓர் சுதந்திரப் போராட்டக்காரர். மும்முறை சிறை சென்றவர். பல மொழிகள் தெரியும். பல கலைகள் கற்றுக் கொடுத்தவர். துணிச்சலுக்கும் சுதந்திர வாழ்க்கைக்கும் துணை நின்றவர். பிள்ளைப் பருவ முதல் மிகப் பெரியவர்களை இலக்கிய மேதைகளை, கல்கி போன்ற கதாசிரியர்களை அறிமுகப் படுத்திவைத்தவர்.

கதராடை கையால் நூற்று நெய்யப்பட்டு வருவது. உழைப்பின் அடையாளம் என்று மதித்தேன். அதை உடுத்தியவர்கள், காந்திஜியின் பெயரைச் சொல்லுகின்றவர்கள் குடிப்பதா? கோபமும் வெறுப்பும் வந்தது. என்னால் வீட்டை விட்டுப் போக முடியவில்லை. ஆனால் பெற்றவர் மீது கோபம், பேசுவதை நிறுத்தினேன். பல முறை காரணம் கேட்டார். ஒரு நாள் சொல்லிவிட்டேன். அன்று முதல் அவர் குடிப்பதை விட்டாலும் என் மனத்தில் காயம் தங்கிவிட்டது. அரசியலில் போலி முகமும் உண்டு என்பதைப் புரிந்து கொண்ட முதல் நாள் அது.

அரசியல் படிக்கப்பிடிக்கும். தெரிந்து கொள்ள ஆர்வம் உண்டு. ஆனால் ஒரு நாளும் அரசியல் வாழ்க்கையில் சேரக்கூடாது என்ற வைராக்கியம் பிறந்தது. இது போன்று இன்னும் சில சம்பவங்கள் என்னைக் காத்தது.

வீட்டைவிட்டு வெளியில் வந்த அம்புஜம்மாள் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டார். கள்ளுக்கடை மறியல், அன்னிய துணி மறுப்பு என்று போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

அதன் பின்னர் அவரே காங்கிரஸ் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்த ஆரம்பித்தார். கூட்டத்தில் கலப்பது என்பதற்கும் ஏற்பாடுகள் செய்து மற்றவர்களைக் கலந்து கொள்ளும்படி செய்வது என்பதும் வேறு. இத்திறன் இருந்ததால் தமிழகத்தில் கூட்டங்களைக் கூட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தி தங்கள் சமுதாயத்திற்கு தொண்டு நிறுவனங்கள அமைத்துக் கொள்ளும் தகுதியை வளர்த்தார். பம்பாய் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்ற பொழுது காந்திஜியுடன் இன்னும் நெருங்கிப் பழக முடிந்தது.

அம்புஜவல்லி என்ற பெயரை அம்புஜம் என்று மாற்றியவர் காந்திஜி. காந்திஜிக்கு அருகில் இருந்து விசிறிக் கொண்டே இருப்பார். அப்பொழுது காந்திஜி மற்றவர்களுடன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பார். காந்திஜியின் தாக்கம் அவரிடம் நிறைய இருந்தது. திரும்பி வந்த பின்னரும் வார்தாவிற்கு அம்புஜம்மாளை அழைத்தார் காந்திஜி. ஆனால் அவருடைய தந்தை அனுப்ப மறுத்தார். உடனே உண்ணா விரதம் இருக்க ஆரம்பித்தார்.


இந்த இடத்திலும் என் சொந்த அனுபவம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். என் பள்ளித் தோழி பெரியவளானதும் அவர்கள் வீட்டில் அவளைப் பள்ளிக்கு அனுப்ப மறுத்தனர். அவர்கள் வீட்டிற்குச் சென்று அவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு உண்ணா விரதம் இருந்தேன். அவளைப் பள்ளிக்கு அனுப்பச் சொல்லி உட்கார்ந்து விட்டேன். ஒப்புதல் கிடைக்கும் வரை என் உண்ணா விரதப் போராட்டம் நீடித்தது. அதுதான் என்னுடைய முதல் உண்ணா விரதப் போராட்டம். தொடர்ந்து என் வாழ்க்கையில் பல முறை இருந்தேன். ஆம் என் பணிக்களத்தில். வீட்டில் அல்ல. தொடர்களில் அந்த நிகழ்வுகளும் வரும்.

எங்கள் காலத்தில் காந்திஜியால் உண்ணாவிரதமும் சத்தியாகிரகப் போராட்டமும் மக்கள் மனத்தை ஈர்த்த செயல்கள். எங்கோ இருந்த காந்திஜியால் இந்தியாவின் ஓர் மூலையில் இருக்கும் குக்கிராம மக்களையும் சின்னஞ்சிறு சிறுவர்களையும் அவர் வழியில் செல்ல வைத்தது. காந்திஜியின் இயக்கம் ஒருமைப்பாட்டைக் கொண்டுவந்தது. பிரிவினைவாதமல்ல.

– தொடரும்

# தமிழின் தொன்மையை உலகுக்கு உணர்த்திய பேரறிஞர்

நேர்மையான அதிகாரி, இலக்கியத்துக்கும் அறிவியலுக்கும் மைய நீரோட்ட பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்த முன்னோடி இதழாளர், தமிழ் எழுத்து வடிவத்தின் வரலாற்றையும் சிந்துச் சமவெளி எழுத்துகளையும் பற்றிய ஆராய்ச்சிக் காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்



துக்கொண்ட ஆய்வாளர் என்று பன்முக ஆளுமை யாக விளங்கியவர் ஐராவதம் மகாதேவன். தான் பங்கெடுத்துக்கொண்ட ஒவ்வொரு துறையிலும் தனது முன்னோடித் தடங்களைப் பதித்த அவரின் மறைவு தமிழியலுக்கு மட்டுமல்ல, இந்தியவியலுக்கும் பேரிழப்பு!

27 ஆண்டு காலம் ஆட்சிப்பணித் துறையில் மத்திய - மாநில அரசுகளின் முக்கியப் பொறுப்புகளை வகித்த ஐராவதம் மகாதேவன் நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் முன்னுதாரணமாக விளங்கியவர். ஆட்சிப்பணித் துறையிலிருந்து விருப்ப ஓய்வுபெற்ற அவர், கல்வெட்டியல் ஆய்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். அவர் 'தினமணி' ஆசிரியர் பொறுப்பிலிருந்த நான்காண்டு காலம் தமிழ் இதழியலின் திருப்புமுனைக் காலகட்டம். பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியதோடு தமிழ்மணி, அறிவியல்மணி பகுதிகளைத் தொடங்கி, தமிழ் வாசகர்களுக்கு தமிழ் இலக்கியங்கள், அறிவியல் சார்ந்த கட்டுரைகளைக் கொண்டுசேர்த்தார். நாளிதழின் மொழிப் பயன்பாட்டைச் செழுமைப்படுத்தினார்.

பண்டைக் கால வரலாற்றுக்கான முதன்மையான வரலாற்றுச் சான்று கல்வெட்டுகள்தான். அசோகரின் கல்வெட்டுகளுக்கு ஜேம்ஸ் பிரின்செப் பொருள்விளக்கம் அளித்தபோதுதான் வட இந்தியாவின் பண்டைக் கால வரலாறு உலகறியும் வாய்ப்பு கிடைத்தது. தென்னகமோ, வரலாற்றுக்கும் முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த எழுத்து வடிவங்களைக் கொண்டிருந்தபோதும் அவை குகைகளிலும் மலைப்பாறைகளிலும் கண்டுகொள்ளப்படாமலேயே கிடந்தன.



கல்வெட்டுகளின் துணைகொண்டு தமிழ் எழுத்து வடிவங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஐராவதம் மகாதேவன், தமிழ் எழுத்து வடிவத்தின் வளர்ச்சியையும் சிந்துவெளி எழுத்துகளுக்கும் இடையிலான தொடர்பையும் விளக்கினார். சங்க கால மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தார்கள் என்பதற்கு ஐராவதம் மகாதேவனின் ஆய்வுகளே அடிப்படையாக இருக்கின்றன. கல்வெட்டில் தொடங்கிய அவரது ஆய்வுப் பயணம் தொடர்ந்து நாணயங்கள், குகைகள், பாறைகள், பானை ஓடுகள், சொல் ஆராய்ச்சி என்று விரிந்து பரந்தது.

பழந்தமிழர் வரலாற்றைக் கவ்வியிருந்த புகைமூட்டங்கள் ஐராவதம் மகாதேவனின் ஆய்வு வெளிச்சத்தால் நீங்கின. தமிழியல் மற்றும் தொன்மை வரலாறு குறித்த ஆராய்ச்சியை அறிவியல்பூர்வமாக அணுகியவர் ஐராவதம் மகாதேவன். அதுவே அவரது ஆய்வு முடிவுகளின் அழுத்தமான அடிப்படை. கல்விப்புலத்தை நேரடியாகச் சாராமல் இதைச் செய்துமுடித் திருக்கிறார் என்பது இன்னொரு வியப்பு.

சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம், பழந்தமிழ்க் கல்வெட்டுகள் குறித்த அவரது இரண்டு ஆய்வு நூல்களும் தமிழியல் மற்றும் தொன்மை வரலாற்றுத் துறைக்கு மிக முக்கியமான பங்களிப்பு. இனி அத்துறையில் அடியெடுத்துவைக்கும் ஒவ்வொரு ஆய்வாளருக்கும் அது வழிகாட்டியாக, கையேடாக, பாடநூலாகத் திகழும். ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக நடந்துவரும் சிந்துச் சமவெளி நாகரிக ஆய்வை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, அடுத்தகட்டத்துக்கு முன்னெடுத்துச் சென்றவர் ஐராவதம் மகாதேவன். இந்திய வரலாற்று ஆய்வை வழிநடத்திய அறிஞர்களின் பெயர்களில் தமிழாளுமை ஐராவதம் மகாதேவனின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

– இர்வின்



**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை – 600 078. Email : news@makkalvisaranai.com
Contact : 93821 33334, 044 - 4861 5321

# எச்சரிக்கை விடும் ஜனாதிபதி



உணவுப் பொருள்களை தேவைக்கும் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. ஆனால் உணவுப் பொருள்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைப் பதில்லை. இதற்கு உணவு உற்பத்தியில் சங்கிலித் தொடர் நிகழ்வுகள் சரிவர நிர்ணயிக்கப்பட வேண்டும். உணவுப் பொருள் வீணாவதைத் தடுக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வலியுறுத்தினார்.

அகில இந்திய உணவு பதப்படுத்துவோர் சங்கத்தின் (ஏஐஎப்பிஏ) 70-ம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் மேலும் கூறியதாவது: விவசாயி உற்பத்தி செய்யும் உணவுப் பொருளுக்கு கிடைக்கும் விலை, நுகர்வோர் அதே பொருளுக்கு கொடுக்கும் விலை ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளி குறைக்கப்பட வேண்டும்.

உணவுப் பொருள்கள் வீணாவது தடுக்கப்பட வேண்டும். அதேசமயம் எளிதில் மக்கும் வகையிலான பேக்கேஜிங் முறை அது சார்ந்த உற்பத்தித் துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். மனித சமூகத்தின் உடல் நலனுக்கு ஏற்ற உணவு வகைகளைஅளிப்பதில் பதப்படுத்தும் துறை உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக அளவில் இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை நிலவவில்லை. இந்தியாவில் உள்ள பதப்படுத்தும் தொழிற்சாலைகளை கருத்தில் கொண்டால் இந்தியாவின் உற்பத்தி தேவைக்கும் அதிகமாகத்தான் உள்ளது. சர்வதேச அளவில் இந்தியா போட்டியிட முடியும். இதன் மூலம் பொருளாதார பலனையும் எட்ட முடியும். இந்த பலன் அனைத்தும் விவசாயிகளையும் சென்றடைய செய்ய வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

உணவு பதப்படுத்தலில் நான்குமுனை அணுகுமுறை அவசியம். அதாவது விவசாய உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும். உணவு பதப்படுத்தல் தொழிலும் விரிவடைய வேண்டும். இதற்கு முதலில் நாம் உணவுப் பொருள் உற்பத்தியாகும் விவசாய நிலத்திலிருந்து அது உணவாக சென்றடையும் இடம் வரை சங்கிலித் தொடராக இணைக்கப்பட வேண்டும். உணவு உற்பத்தி செய்யும் விவசாயிக்கு கிடைக்கும் விளை பொருளுக்கான விலை, அதே பொருளை

வாங்கும் நுகர்வோர் கொடுக்கும் விலை ஆகியவற்றுக்கு இடையே உள்நாட்டிலும், சர்வதேச அளவிலுமான விலை வித்தியாசம் குறைக்கப்பட வேண்டும்.

உலக அளவில் மிகப் பெரும் பிரச்சினையாக இருப்பது உணவுப் பொருள் வீணாவதுதான். இது தவிர்க்கபட வேண்டும். அதற்கு உணவு பதப்படுத்தும் துறை சிறப்பாக செயல்பட வேண்டும் என்றார். உணவு வீணாவது என்பது மிகப் பெரும் பொருளாதார பிரச்சினையாகும். இந்தியா போன்ற பரந்துபட்ட நாட்டில் உணவு நுகர்வில் மிகப் பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. உணவு வீணாவதை தடுப்பதன் மூலம் இந்தக் குறையைப் போக்க முடியும். அனைத்து தரப்பினருக்குமான உணவு விநியோகம் சீராக வழியேற்படும் என்றார்.

ஆண்டுதோறும் *1.2* லட்சம் டாலர்மதிப்பிலான உணவுப் பொருள் வீணாவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையை மேற்கோள் காட்டிய அவர், இந்த அளவானது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி)



பாதிஅளவாகும் என்றார். அறுவடைக்குப் பிறகு ஏற்படும் இழப்பீடு ரூ. *1* லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய இழப்பீட்டை குறைப்பதில் உணவு பதப்படுத்தும் துறைமுக்கிய பங்காற்ற முடியும் என்றார். விவசாயிகளுடன் நீண்ட காலஅடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொண்டு அதற்குரிய முதலீடுகள் மற்றும் கட்டமைப்புகளை உணவுபதப்படுத்தும் தொழில் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்றார். இதன் மூலம் உணவுப் பொருள் வீணாவது குறையும். எளிதில் அழுகும் பொருள்கள் நீண்ட காலம் பாதுகாக்கப்படும் என்றார்.

மத்திய அரசின் முத்ரா கடன் திட்டத்தை உணவு பதப்படுத்தும் தொழில்துறையினர் பயன்படுத்தத் தொடங்கும்போதுதான் அத்திட்டம் வெற்றிகரமானதாக மாறும் என்றார்.

பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க எளிதில் மக்கும் தன்மை கொண்ட மாற்று பாக்கேஜிங் முறையை கொண்டு வர வேண்டும். இதன் மூலம் சுற்றுச் சூழலையும் மண் வளத்தையும் பாதுகாக்க முடியும். உணவுப் பொருள்கள் சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம்தான் வெளி நாடுகளுக்கும் எளிதில் ஏற்றுமதி செய்ய முடியும். புதிய உணவுப் பொருள்கள் சர்வதேச தரத்தில் வரும்போதுதான் அதற்கு வரவேற்பு இருக்கும் என்றார் ராம் நாத் கோவிந்த்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள உணவு பதப்படுத்தல் துறைசெயல்பாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் *50* சதவீதத்துக்கும் குறைவான நிலையில்தான் இத்துறை உள்ளது. இத்துறையில் வளர்ச்சிக்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக ஐடிசி நிர்வாக இயக்குநர் சஞ்ஜீவ் பூரி குறிப்பிட்டார்.

- M.தரணி

# முன்மாதிரியாக மாறிய அரசுப் மழலையர் பள்ளி

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் அடுத்த ஆண்டு முதல் தொடங்கப்பட உள்ள தாக அரசு அறிவித்துள்ள நிலையில், இத்திட்டத்தை புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள வல்லம்பகாடு கிராம மக்கள் 4 ஆண்டு களுக்கு முன்பே சாதித்துள்ளனர்.

வல்லம்பகாட்டில் 250 குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு, கடந்த 1984-ல் அரசுத் தொடக்கப் பள்ளி தொடங்கப் பட்டது. தொடக் கத்தில், 80-க்கும் மேற் பட்ட மாணவர்கள் பயின்ற இப்பள்ளி யில் கடந்த 2014-ம் ஆண்டில் 21 மாணவர்கள் மட்டுமே பயின்றனர்.

இதையடுத்து, இந்தக் கிராமத்தில் இருந்து வெளியூர்களில் உள்ள பள்ளி களுக்குச் சென்று பயின்றுவந்த மாண வர்களை வல்லம்பகாடு பள்ளி யிலேயே மீண்டும் சேர்க்க தொடங் கினர்.

கிராம மக்களின் நடவடிக்கையால், தற்போது எல்கேஜி, யுகேஜியில் 41 மாணவர்கள் பயில்கின்றனர். இது தவிர, இங்குள்ள தொடக்கப் பள்ளி யில் 96 பேர் பயில்கின்றனர். அனை வருக்கும் ஆங்கில வழிக் கல்வி கற்பிக்கப்படுகிறது.



இதையடுத்து, வல்லம்பகாட்டில் பள்ளியை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்க ஊர் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு களின்படி, ரூ.7 லட்சத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு, 2014-ல் இப்பள்ளியில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடங்கப்பட்டன. மேலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கூடுதல் மின்விசிறிகள், கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

அரசுப் பள்ளிகளில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தொடங்கப்பட உள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ள எல்கேஜி, யுகேஜி வகுப்புகளை இந்தக் கிரா மத்தில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி செயல்படுத்தி வரு வது முன்மாதிரியாக அமைந்துள்ளது.

இதுகுறித்து, ஒரு மாணவரின் தாய் அங்காளஈஸ்வரி, கூறியது: உள்ளூர் மாணவர்கள்

வெளியூர்களில் உள்ள தனியார் பள்ளிகளில் அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்பட்ட தால் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இப்பள்ளியின் மாணவர் எண்ணிக்கை 21 ஆகக் குறைந்தது.

மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தால் பள்ளி மூடப்படுவதற்கு வாய்ப்புள்ளது என அரசு அலுவலர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, பள்ளி யைப் பாதுகாப்பதற்காக ஊர் மக்கள் சார்பில் கூட்டம் நடத்தி, அதில் எடுக் கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடங் கப்பட்டு இன்றுவரை இவ்வகுப்புகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், எங்கள் ஊர் பள்ளி யில் கிராம மக்களின் முன்முயற்சியில் தொடங்கப்பட்ட அரசுப் பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகளைத் தொடங்கும் திட்டத்தை தமிழகம் முழு வதும் உள்ள அரசுப் பள்ளிகளில் தொடங்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி யாக உள்ளது. மேலும், கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்றார்.

இதுகுறித்து, பள்ளியின் தலைமை ஆசிரியர் டி.ராமு கூறியது: ஊர் மக்களின் முயற்சியால் இப் பள்ளி, முன்மாதிரி பள்ளியாக உயர்ந்துள் ளது. எல்கேஜி, யுகேஜி வகுப்பு களுக்கு 2 ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு கிராம மக்களின் சார்பில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. எல்கேஜி, யுகேஜி வகுப்புகளில் படித்த மாணவர்கள் அனைவரையும் 1-ம் வகுப்பில் இருந்து 5-ம் வகுப்பு வரை இங்கேயே படிக்க வைக்கின்றனர்.

தரமான கல்வி இலவசமாகக் கிடைப்பதால் வல்லம்பகாடு மட்டுமின்றி பக்கத்து ஊர்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் குழந்தைகளை எங்கள் பள்ளியில் சேர்க்கின்றனர். ஊர் மக்கள் ஒத்துழைத்தால் அரசுப் பள்ளிகளை பாதுகாக்கலாம் என்பதற்கும், புதிய வகுப்புகளைத் தொடங்கி பள்ளியை அடுத்த கட்டத்துக்கு மேம்படுத்தலாம் என்பதற்கும் உதாரணம் எங்கள் பள்ளி" என்றார்.

- குருதேவ்


# நிருபர்கள் தேவை

பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

Cell : 93821 33334 / 044 - 4861 5321

Email : writermouriyan@gmail.com



# சிந்தனை முத்துக்கள்






இஞ்சினியர் படிச்சிங்கலே சார், உங்க சம்பளம் சுமாரா எவ்வளவு வருது !



சம்பளமே சுமாராத்தாங்க வருது !

ஆபாசம் என்பது அணியும் உடைகளில் இல்லை. பார்ப்பவர் கண்களில் தான் உள்ளது.. என்பவர் கண்களில் மிளகாய்ப் பொடியை தூவி விட்டு எரிச்சல் என்பது மிளகாய்ப் பொடியில் இல்லை. உங்கள் கண்களில்தான் உள்ளது என்று கூறலாமா ???

ஒரு கார் இருந்தால் ஆடம்பரமாக வாழலாம்..!



ஒரு மிதிவண்டி இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம்..!

சிவப்பு மனிதனுக்கும் நிழல் கருப்புதான், கருப்பு மனிதனுக்கு ரத்தம் சிவப்புதான், வண்ணங்களில் இல்லை வாழ்க்கை, மனித எண்ணங்களில் உள்ளது வாழ்க்கை.


விடிய முன் எழுந்து வேலைக்கு போகும் விவசாயிகளின் வாழ்க்கை



இன்று வரை விடியவே இல்லை




அதுவா வளரும் போது காசு குடுத்து வெட்டுறோம்...



அதுவா கொட்டும் போது காசு குடுத்து வளர்க்கிறோம்... தலைமுடி.

கையில் சூலம் கொண்டோ
தோளில் சிலுவை சுமந்தோ

ஒளியாய் திருவாய் மலர்ந்தோ
கடவுள் நம்மிடம் வருவதில்லை.

விழும் போது தூக்கி விடுவோரும்
தாழ்ந்த போது தோள் கொடுப்பவரும்

புன்னகையை பரிசாக கொடுப்பவரும்
பசியறிந்து உணவிடுவோரும்

பிற உயிரை தன்னுயிராய் நேசிப்போரும்
மழலையின் மொழியில் மயங்குவோரும்

புண்ணியம் செய்து வாழ்பவர்களும்
எல்லோரும் கடவுளின் வடிவங்களே

புரிந்தவன் கடவுளை காண்கிறான்
புரியாதவன் கடவுளை தேடுகிறான்.














No Comments

சார்லி சாப்ளின் ஒருமுறை பலரும் நிறைந்த சபையில் ஒரு ஜோக் சொன்னார் சபையே சிரிப்பாய் அதிர்ந்தது கொஞ்ச நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூறினார் பாதிப்பேர் மட்டுமே சிரித்தனர் அதே போல் சிறிது நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூற அங்கொன்றும் இங்கொன்றும் மட்டுமே சிரித்தனர் நான்காம் முறை கூற சபையில் நிசப்தம் நிலவியது!! அப்போது சார்லி சாப்ளின் கேட்டாராம் ஒரே ஜோக்கிற்கு மறுபடியும் மறுபடியும் சிரிக்காத நாம், ஏன் ஒரே கவலையை நினைத்து மறுபடி மறுபடி அழுகிறோம் என்று!

மக்கள் விசாரணை பத்திரிகையின் 8-ம் ஆண்டு விழா 22-12-2018 அன்று விருகம்பாக்கத்தில் நடைபெற்றது. இவ்
மாத இதழ் மற்றும் ஆ.மவுரியன் எழுதிய "சர்கார் உத்யோகம்" என்ற நாவல் வெளியிடப்பட்டது. மேலும் 5 சிறந்த பத்திரி
சரவணன், மதி ஒளி ராஜா, அரசியல் முத்திரை செல்வம், அதிரடி குரல் ஜெயகாந்த், தொட்டில் செய்தி முருகேசன், பகு
விஜய் முருகன், அதிரடி தீர்ப்பு சீனிவாசன், முள்ளும் மலரும் மற்றும் மக்கள் விசாரணையின் இணை ஆசிரியர் V.அருண












விழாவிற்கு மக்கள் விசாரணை ஆசிரியர் முனைவர் ஆ.மவுரியன் தலைமை தாங்கினார். அப்பொழுது “அரசியல் தீர்ப்பு” ரிகையாளருக்கு விருது மற்றும் ஊக்கத்தொகை 2000 ரூபாய் வழங்கப்பட்டது. பீப்பிள் டுடே சத்யநாரயணன், நமது நகரம் ஜன் குரல் ஜெகதீசன், சட்ட கேடயம் ராஜன், கடல் துளிகள் யுவராஜ், புரசை எக்ஸ்பிரஸ் பிரபாகரன், பாக்கியம் சினிமா ாசலம் உள்ளிட்ட பத்திரிகை ஆசிரியர்கள் கலந்துகொண்டு மக்கள் விசாரணை பத்திரிகைக்கு வாழ்த்து தெரிவித்தனர்.












# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

வள்ளலார் அருளிய கல்ப மருந்து



**க**ற்பங்கள் உண்ணும் போது, சாதாரணமான உப்பைத் தின்றால் கற்பத்தினால் கிடைத்த பலன் கெடுவதுடன், கண்ணிரண்டும் கெட்டுப் போக வாய்ப்புள்ளது. எனவே, கட்டிய உப்பை மட்டுமே உண்ண வேண்டும் என்னும் சிறப்பு விதிகள் உரைக்கப் படுவதனால், மருந்துண் போர் நலனை நுணுக்கமாகக் கண்காணித்து உரைக்கப்படுவது தெரிகிறது. மருந்து பயனுடை யதாக இருந்த போதிலும், மருந்துண் போரின் நலனைக் கண்காணிப்பதும், பாதுகாப்பதும் மருத்துவத்தின் தலையாய கடன் என்பது தெற்றென விளங்கும்.

கற்பங்கள் உண்ணும் முறைகளையும், பத்திய உணவுகளையும் பின்பற்றி உடலைப் பாதுகாப்பதைப் போலவே, சாதாரணமாகத் தலைமுழுகப் பயன்படுத்தும் பொருளும் கற்பமுறையாக உரைக்கப் படுகிறது.

"நேமேதான் நெல்லிக்காய் பலந்தான் ஆறு
நிலையாக நீர்மிளகு பலந்தான் அஞ்ள
அஞ்சப்பா கடுக்காய்தான் பலந்தான் நாலு
அப்பனே வேப்பரிசி பலந்தான் மூன்று
மஞ்சளப்பா மஞ்சளது பலந்தான் ரெண்டு
வகையாக இவைகளைக் கூட்டிக் கொண்டு"

என்று பொருள்களை வரிசைப்படுத்திய முறையை அவற்றின் அளவைக் கொண்டே அமைந்திருப்பதும் நோக்கத் தக்கது. இதனையே,

"பூ நெல்லி நீர்மிளகு பொற்கடுக்காய் வான்மஞ்சள்
கானகத்து வேம்பரிசி காரிகையே மானங்கேள்
ஒன்றரை ஒன்றே கால் ஒன்று உறுதிமுக்கால்
கன்றரைக்கை யான் நீரில் தேய்"

இச்செய்யுளும் மேற்கண்ட ஐந்து பொருள் களையே உரைத்திருந் தாலும், வேம்பரிசியும், மஞ்சளும் அளவில் மாறுபடுகின்றன. மேற்கண்ட கற்பத்தினால் தலை (கபாலம்) இறுகும் என்று திருமூலரும் (கபாலம்) தலை இறுகுவதுடன், முடி கருக்கும்; பகலில் வான்மீன்கள் தோன்றும். உடலிலுள்ள நச்சு நீர் வற்றும், உடல் பொன் போலாகும் என்று நந்தீசரும் உரைக்கக் காணலாம்.

தூதுவளையைக் கறி, வற்றல், ஊறுகாய், கீரை இப்படி முறைப் படுத்தி, ஒரு மண்டலம் உண்டு வந்தால் இரவும் பகல்போலத் தோன்ற கண் ணொளி கூடும். இதனை இலக்கிய நயத்துடன்,

"திருக்குளத்தை நன்றாக்கித் தின்னுவையே னல்ல
திருக்குளத்தைப் போலே திருத்துந் திருக்குளத்தை
யெல்லா மிரவுவிளை யென்னவருந் தூதுவளை
யெல்லா மிரவு மிளி யென்"

நீர்க்குளத்தைத் திருத்தி விளங்கச் செய்வதைப் போல் கண்குளமான நேத்திரத்திலிருக்கின்ற பித்த நீர் முதலான மலினங்களைப் போக்கும் செயலைத் தூதுவளை செய்யும் என்பதைக் அறியலாம்.

கூறப்படும் கற்பத்தின் பொருள்கள் சிறந்த பொருள்களிலிருந்து மட்டுந்தான் செய்யப்படுகின்றன என்ற நிலையில்லை. குப்பைக்குச் செல்ல வேண்டிய பொருள் என்று தூக்கி எரியப்படுகின்ற பொருள்கள் கூட கற்பங்களாக ஆகின்றன என்பது வியப்பிற்குரிய ஒன்றாகவும், அதனால் விளையக் கூடிய நன்மை அதனினும் வியப்பாகவும் தோன்றும்.

பல்வேறு வகைப்பட்ட பறவைகளின் முட்டை ஓடுகள் கற்ப மாகின்றன. கோழி, பருந்து, கிளி, காக்கை, காடை, மயில் ஆகியவற்றின் முட்டை ஓடுகள் பற்பம் எனும் முறையில்

கற்பமாகின்றன. அவை, முறையே, அத்திசுரம், மூர்ச்சை, காசம், சத்தி , பிடிப்பு, வெட்டை, உப்புசம், பெருவியாதி, வெப்பம், மாரடைப்பு, கபமிகுதி, சன்னி ஆகியவற்றைப் போக்குகின்றன.

**இரத்தச்சுத்தி**:

உடல் தூய்மைக்கு (காயசித்தி) இரத்தம் தூய்மையாக வேண்டும். இரத்தத்தை கொண்டே உடலின் நோய்க் குற்றங்கள் அறியப்பட்டு வருகின்றன. அதேபோல் இரத்தத்தைத் தூய்மை யாக்கி, உடலைத் தூய்மையாக்கும் முறை சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளில் ஒன்றாக அறியப் படுகிறது. இரத்தத்திலுள்ள நோய்க் கிருமிகளை அழிப்பதே மருத்துவத் துறையின் தலையாயப் பணி என்பதை அடிப்படையாகவும் கொண் டிருக்கக் காண்கிறோம். அதே போல், உடல் நோயுற்றிருந்தால் துர்நாற்றமும், நிறத்தில் மாற்றமும் ஏற்படுவதைக் காணமுடிகிறது. இதற்கு இரத்தத்தில் நோய்க்கிருமிகள் அண்டியிருப்பதே காரணமாகும். இவற்றையெல்லாம் முறைப் படுத்துவதே மருந்தின் பணியாகும். அதனையே காயசித்தியின் தொடக்கமாகக் கருதுவர்.

"கரிசாலை, குப்பைமேனி, கரந்தை, வல்லாரை, நீலி,
பொற்றலை, செருப்படை ஆகியவற்றை நிழலிலுலர்த்தி
இடித்துச் சூரணம் செய்து வெருகடி அளவு, தினமும்
தேனில், ஒரு மண்டலம் உண்டால், உடல்
நோய்கள் போகும் காய சித்தியாகும்"

மேற்கண்ட மூலிகைகள் மிகவும் எளிமையாகக் கிடைக்கக் கூடியவை. ஆடு, மாடுகள் அன்றாடம் தின்னக் கூடியவை. என்றாலும் அவற்றிலுள்ள மருத்துவக்குணங்களும், ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஆற்றுகின்ற மருந்தாற்றலும் அறியப்படாமல் இருக்கும் செய்திகளாகும்.

"உண்ணப்பா மண்டலந்தான் நோயும் போகும்
உதிரத்தில் உத்தமனே நோயும் போகும்"



ஒரு மண்டலம் உண்டால் நோய் போவதுடன் இரத்தத்திலுள்ள கிருமிகள் எல்லாம் அழிந்து போகும் என்பது குறிப்பிடத்தக்கது. கிருமிகள் எவை என்று குறிப்பிடாமல் கூறப்பட்டுள்ளதால், உடலில், இரத்தத்தில் இருக்கத் தகாத கிருமிகள் என்றே கருத வேண்டும்.

"பண்ணப்பா பவளம்போல் சிவந்தி ருக்கும்
காயமெல்லாம் சம்பழத்தின் வாசம் வீசும்
விண்ணப்பா அந்தரத்தில் மீன்க ளெல்லாம்
வெகுளாமல் பகல்காணத் தோற்று விக்கும்"

உடல் வண்ணம் பவளம் போல் சிவந்து காணும். அத்துடன் சம்பழத்தின் வாசம் போல உடலிலிருந்து மணம் வீசும். கண்ணொளி ஏற்படுவதுடன், விண்ணகத்திலுள்ள மீன்களெல்லாம் கற்பம் உண்டவர் காண்பதைக் கண்டுவெகுளாமல் கண்ணின் காட்சிக்கு ஏதுவாகித் தோற்றமளிக்கும் என்று கண்ணொளியைச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

முறைகள் மிகவும் எளிதாக இருக்கின்ற போதிலும் அதனுள் புதைந்துள்ள பயன்கள் அரிதாகவும் சிறப்பாகவும் இருக்கின்றன.

**கற்ப மருந்தின் சாதனை**:


தன் இனத்தைப் பெருக்குதலும், உயிரைப் பாதுகாத்தலும் இவ்வுலகில் ஒவ்வொரு பிராணியின் பிறவிக் கடன். இத்தலையாயக் கடன் அது அதன் பண்பு. ஆனால், பகுத்தறிவு மிக்க மனிதனோ தன் இனத்தை மட்டும் பெருக்கிப் பாதுகாப்பதுடன், ஒருபடி முன்னே சென்று தன் வாழ்நாளையும் நெடுங்காலம் பாதுகாக்கும் வழிவகைகளைக் காண முற்பட்டான். இந்த முயற்சியில் உடலை வாட்டும் நரைதிரை மூப்பையும், வாழ்வை வதைக்கும் நோய் நொடி சாக்காட்டையும் எதிர்த்துப் போராடும் மருந்துகள் பலவற்றையும் கண்டான்.

இந்த மருந்துகள் இருவகைப்படும். முதல்வகை இயல்பாகத் தோன்றும் உடல் நோய்களுக்கு மருந்தாக அமைந்து உடல் நலத்தைப் பேணுபவை. இரண்டாம் வகை, உறுப்புகளின் இளமையைப் பாதுகாத்து மனித வாழ்வை நெடுங்காலமாகப் பேணுகின்ற காய கற்ப மருந்துகள் என்று, காயகற்பம் பற்றி சித்தர்கள் கூறியுள்ளனர்.

- தொடரும்

# அதிகம் சாதித்தப் பெண்கள்





மத்திய அரசு அறிவித்த பத்ம விருதுப் பட்டியலில் 14 பெண்கள் இடம்பெற்றிருந்தார்கள். பத்ம விருதுகளில் பெண்களுக்கான தனிப் பிரிவுகள் இல்லை என்றபோதும் தங்களுடைய திறமையால் இவர்கள் சாதனைபடைத்திருக்கிறார்கள். அவர்களில் பிஹார் நாட்டுப்புறக் பாடகி ஷ்ரத்தா சின்காவுக்கு உயரிய விருதான பத்ம விபூஷண் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த யோகா ஆசிரியை நானம்மாள், நாட்டுப்புற பாடகி விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன், 500-க்கும் மேற்பட்ட மூலிகை மருந்துகளைக் கண்டறிந்த கேரளத்தைச் சேர்ந்த மூலிகைப் பாட்டி லட்சுமி குட்டி, கர்நாடக மாநிலத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தேவதாசிகளைத் தன்னுடைய 'மாஸ்' தொண்டு நிறுவனத்தின் மூலம் மீட்டெடுத்த சித்தவ்வா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெரும்பாலும் ஆண்களே நிறைந்திருக்கும் மயானப் பணிகளில் பெண் ஒருவர் பணியாற்றுவதை அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சார்பில், 'சவாலான துறையில் சாதித்த முதல் பெண்' என்ற தேசிய விருது சென்னையைச் சேர்ந்த பிரவீனா சாலமனுக்கு வழங்கப்பட்டது.

சென்னை ராஜீவ்காந்தி மருத்துவ மனையில் ஒப்பந்த முறையில் பணியாற்றிவந்த திருநங்கைகள் நேயா, செல்வி ஆகியோருக்குத் தமிழக அரசு இந்த ஆண்டு நிரந்தப் பணி வழங்கியது. அரசு வேலைக்கான வயது வரம்பை இவர்கள் கடந்திருந்தாலும் திருநங்கைகளை ஊக்குவிக்கும்வகையில் இவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்பட்டுள்ளது.

சிவங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உள்ள நெற்குப்பை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அழகு, மத்திய அரசின் மகிளா கிஸான் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தன்னுடைய 15 ஏக்கர் நிலத்தில் விவசாயம் மேற்கொள்வதுடன் மாடு, ஆடு, கடக்நாக் கோழி போன்றவற்றை வளர்த்தும் வருகிறார். ஆவின் முகவராக இருப்பதுடன் டீக்கடையும் நடத்திவருகிறார்.

சென்னையைச் சேர்ந்த திவ்யா சூரியதேவரா அமெரிக்காவின் முன்னணி

கார் நிறுவனமான ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் முதன்மை நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 110 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனத்தில் பெண் ஒருவர் இப்பதவிக்கு வருவது இதுவே முதல் முறை.

ஏழை மாணவர்களின் கல்விக்காக உலக அளவில் பிரச்சாரம் நடத்திவரும் மலாலா யூசஃப்சாய் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தன் சொந்த நாடான பாகிஸ்தானுக்கு முதன்முறையாகச் சென்றார். பாகிஸ்தானில் தாலிபன் தீவிரவாதிகளால் சுடப்பட்டு பல்வேறுகட்ட சிகிச்சைக்குப் பிறகு உயிர்பிழைத்தவர் மலாலா. சிகிச்சைக்குப் பிறகு லண்டனில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டில் இருந்த மலாலா, பாகிஸ்தானுக்கு மீண்டும் வந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தானின் உள்ளூர் செய்தி சேனலான கோஹினூர், மார்வியா மாலிக் என்ற திருநங்கையைச் செய்தி வாசிப்பாளராகப் நியமித்து உள்ளது. அந்நாட்டிலேயே முதன்முறையாகத் திருநங்கை ஒருவரைப் பணியமர்த்திய பெருமை இந்நிறுவனத்துக்குக் கிடைத்துள்ளது. மார்வியா மாலிக், ஊடகவியல் துறையில் பட்டம் பெற்றவர்.

அரசியல் கட்சிகளில் பெண்கள் தலைமைப் பொறுப்புக்கு வருவது அரிதாகவே உள்ளது. இந்நிலையில் தேமுதிக கட்சியின் பொருளாளராக பிரேமலதா விஜயகாந்த் தேர்வு செய்யப்பட்டார். அக்கட்சியின் அனைத்து மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒருமனதாக இம்முடிவு எடுக்கப்பட்டது. கட்சியில் பிரேமலதா வகிக்கும் முதல் பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய போர் விமானத் துறையில் நுழைந்த முதல் பெண் என்ற பெருமையைப்





பெற்றிருக்கிறார் மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த அவனி சதுர்வேதி. இவர் Mig-21 Bison என்ற போர் விமானத்தைத் தனியாக ஓட்டிய முதல் பெண் என்ற சாதனையையும் படைத்துள்ளார். இவருடன் மோகனா சிங், பாவனா காந்த் ஆகியோரும் போர் விமானப் படைப் பிரிவில் சேர்ந்துள்ளனர்.

பரமக்குடியைச் சேர்ந்த திருநங்கை சத்தியஸ்ரீ ஷர்மிளா, இந்தியாவின் முதல் திருநங்கை வழக்கறிஞராகப் பதிவுசெய்திருக்கிறார். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராகப் பதிவுசெய்த இவரைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை விஜியும் பார் கவுன் சிலில் பதிவுசெய்தார்.

- K. ரமேஷ்குமார்

# நான்காம் தூணின் மாண்பை காப்போம்

மக்கள் விசாரணை
அருணை முரசு
அரசியல் தீர்ப்பு
MAKKAL SEITHI MAIYAM மக்கள் செய்தி மையம்
பீப்பிள் டுடே PEOPLE TODAY
நமது நகரம்
அரசியல் முத்திரை
ரிப்போர்ட்டர் விஷன்
கடல்சிற்பி KADAL CHIRPI
தொட்டில் செய்தி
வெற்றி யுகம்
ரிப்போர்ட்டர் வோர்ல்ட்
அதிரடி குரல்
பேராண்மை
தமிழன் குரல்
உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER
போலீஸ் ரிப்போர்ட்டர்
நாற்காலி செய்தி
சட்ட கேடயம்
திரை தீபம்
PRESS
பாக்கியம் சினிமா BAKKIYAM CINEMA
முதல் தகவல் MUDHAL THAGAVAL
கடல் துளிகள் KADAL THULIGAL
சென்னை செய்திகள் CHENNAI SEITHIGAL
பேனா முள்
பேனா முனை
தகவல் பார்வை
தொகுதி முரசு THOGUTHI MURASU
அதிரடி தீர்ப்பு
நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE
புரசை எக்ஸ்பிரஸ் தமிழ் வார இதழ்
விழா முரசு
நந்தவனம்
மூன்றாம் கண்
VADAPALANI XPRESS
முள்ளும் மலரும்
ஜித்தன்
DAILY INDIA NEWS
சேது நியூஸ்
தொழில் பார்வை
அஞ்சாதே
நுண்ணறிவு NUNNARIVU
PEOPLE PLUS English & Tamil Weekly
REPORTER FLASH
உள்ளாட்சி சுடர் மாதமிருமுறை
மண்ணின் குரல்
விழிப்புணர்வின் குரல்
மெய் எழுத்து
கருட பார்வை GARUDA PARVAI
FINE TIME
FACE NEWS



மக்கள் விசாரணை பத்திரிகையின் 8-ம் ஆண்டு விழா 22-12-2018 அன்று விருகம்பாக்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மக்கள் விசாரணை ஆசிரியர் முனைவர் ஆ.மவுரியன் தலைமை தாங்கினார். அப்பொழுது "அரசியல் தீர்ப்பு" மாத இதழ் வெளியிடப்பட்டது. விழாவில் பீப்பிள் டுடே சத்யநாரயணன், நமது நகரம் சரவணன், மதி ஒளி ராஜா, அரசியல் முத்திரை செல்வம், அதிரடி குரல் ஜெயகாந்த், தொட்டில் செய்தி முருகேசன், பகுஜன் குரல் ஜெகதீசன், சட்ட கேடயம் ராஜன், கடல் துளிகள் யுவராஜ், புரசை எக்ஸ்பிரஸ் பிரபாகரன், பாக்கியம் சினிமா விஜய் முருகன், அதிரடி தீர்ப்பு சீனிவாசன், முள்ளும் மலரும் உள்ளிட்ட பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் மக்கள் விசாரணையின் இணை ஆசிரியர் V.அருணாசலம், துணை ஆசிரியர்கள் தரணி, K.ரமேஷ்குமர், S.சரவணன், A.C.குமார் கலந்துகொண்டு "அரசியல் தீர்ப்பு" பத்திரிகைக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழகத்தில் அடுத்தடுத்து வீசிய புயல்களின் காரணமாக, மின்வாரியத்திற்கு, ரூ.3, 100 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே தரைவழி மின்கேபிள் பதிக்கும் பணியை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. தமிழகத்தில் நாளுக்கு நாள் வீடு, கடை, தொழிற்சாலை, அலுவலகம் அதிகரித்து கொண்டே வருகிறது. இவை செயல்படுவதற்கு மின்சாரத்தின் தேவை முக்கியமான ஒன்றாக இருக்கிறது. தற்போதைய நிலவரப்படி மாநிலம் முழுவதும் சராசரி மின்தேவை, 15,300 மெகாவாட்டிற்கு மேல் இருக்கிறது. இவற்றுக்கான மின்சப்ளையை அதிகமான இடங்களில் மின்வாரியம், கம்பங்களின் மூலமாகவே சப்ளை செய்து வருகிறது.

வாரியம் நடைமுறையில் வைத்திருக்கும் இந்த ‘டெக்னாலஜி’ இயற்கை சீற்றங்களில் எளிதாக சிக்கி கடுமையான பாதிப்பை சந்தித்து வருகிறது. இந்த பாதிப்பானது தமிழகத்தில் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் சென்னை, காஞ்சிபுரம், கடலூர், நாகை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறது. இதற்கு அங்கு மற்ற இடங்களை விட புயலின் தாக்கம் அதிகமாக இருப்பதே காரணம். இது தமிழகத்தில் அடுத்தடுத்து வீசி வரும் புயல்களின் மூலம் நிரூபணமாகி வருகிறது. கடந்த, 2011ம் ஆண்டு ‘தானே’ புயல் வீசியது. அப்போது கடலூரில், 300 கோடி ரூபாய் மதிப்பிலான மின்சாதனங்கள் சேதம் அடைந்தன. இதேபோல், 2016ம் ஆண்டு ‘வர்தா’ புயல் வீசியது.

இதில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் பகுதியில், 1,093 கோடி ரூபாய் மதிப்பிலான மின்சாதனங்கள் சின்னாபின்னமானது. அதே ஆண்டின் இறுதியில், ‘ஒகி’ புயல் வீசியது. அப்போது, கன்னியாகுமரி பகுதியில், 238 கோடி ரூபாய் மதிப்பிலான, மின் சாதங்கள் பாதிப்பை சந்தித்தன. அதேபோல், தற்போது வீசிய, ‘கஜா’ புயலால் நாகை, தஞ்சை, புதுக்கோட்டை, திருவாரூர் உள்ளிட்ட, 12 மாவட்டங்களில், 1,500 கோடி ரூபாய் வரை மின்சாதனங்கள் சேதமடைந்திருக்கிறது.

மீட்புப்பணியானது தொடர்ந்து நடந்து வரும்நிலையில் பல கிராமங்கள் இன்னும் இருளில் மூழ்கியே கிடக்கிறது. அங்குள்ள மக்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தமிழகத்தில் இவ்வாறு தொடர்ந்து அடுத்தடுத்து வீசும் புயல்களினால் சுமார், 3,100 கோடி ரூபாய்க்கு மேல் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு மின்சார

# திவாலான மின் வாரியம்!






வாரியம் மின்கம்பங்களின் வழியாக மின்சப்ளை செய்வதே காரணம். எனவே தான் தொடர்ந்து இவ்வாறான பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இதைதடுக்க தரைவழி மின்கேபிள் திட்டத்தை செயல்படுத்தினால் மட்டுமே முடியும். இதை மக்கள், சமூகநல அமைப்புகள் என பல்வேறு தரப்பினர் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் வாரியம் நடவடிக்கை எடுப்பதில் அலட்சியம் காட்டி வருவதாக குற்றச்சாட்டு எழுந்து இருக்கிறது.

கடந்த, **2011**ம் ஆண்டு 'தானே' புயலால் பாதிப்பு ஏற்பட்ட போதே, தரைவழி மின்கேபிள் பதிக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அப்போது சம்மந்தப்பட்ட பிரச்னையை சமாளிக்க உலக வங்கியிடம், **360** கோடி ரூபாய் நிதி பெற்று, சம்மந்தப்பட்ட திட்டத்திற்கான பணி முதல்கட்டமாக கடலூர், நாகையில் துவங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பணிகள் துவங்கப்படவில்லை. இதையடுத்து, **2016**ம் ஆண்டு வீசிய 'வர்தா' புயலின் போது மீண்டும் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டது.

அப்போதும் பொதுமக்கள் தரைவழி கேபிள் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்படுத்தாததால் தான் மீண்டும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என குற்றச்சாட்டினர். இதையடுத்து நீண்ட இழுபறிக்கு பிறகு, கடலூர், நாகையில் சில இடங்களில் சம்மந்தப்பட்டமுறையில் மின்சப்ளை செய்வதற்கான பணிகள், **2017**ல் துவங்கப்பட்டு நடந்து வருவதாக கூறப்படுகிறது. இதே ஆண்டில் இறுதியில் 'ஓகி' புயலால் பாதிப்பு ஏற்பட்டது. அப்போது மீண்டும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கடலோர மாவட்டங்களில், தரைவழி மின்கேபிள் பதிக்கும் திட்டத்தை செயல்படுத்தாத மின்வாரியத்தை கடுமையாக விமர்சனம் செய்தனர்.

எனவே உடனடியாக செயல்படுத்துவதில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். இதுகுறித்து மின்வாரியத்துறை அமைச்சர் தங்கமணி கூறியதாவது: புயலால் பிரச்னை ஏற்படுவதை தடுக்க தரைவழி மின்கேபிள் மூலமாக மின்சப்ளை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதையடுத்து முதல்கட்டமாக நாகை, வேளாங்கண்ணியில் இத்திட்டம் துவங்கப்படுகிறது. தற்போது அதற்கான முதல்கட்ட பணிகள் நடக்கிறது. மழைக்காலம் முடிந்தவுடன் பணி துவங்கும். அதையடுத்து கடலோர மாவட்டம் முழுவதும் தரைவழி மின்கேபிள் பதிக்கும் திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

மின் வாரியத்திற்கு, **3,100** கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை தரைவழி மின்கேபிள் திட்டம் செயல்படுத்துவதன் மூலம் தடுக்க முடியும் என வாரியத்திற்கு தெரியும். இருப்பினும் அதை கொண்டுவர அதிகாரிகள் முன்வராததற்கு காரணம் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டை போட்டதே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. அதாவது ஒவ்வொரு முறை பாதிப்பு ஏற்படும் போதும், அதை சரிசெய்யும் பணி நடக்கிறது. அப்போது அரசியல்வாதிகள் பலருக்கு ஆதாயம் கிடைப்பதாக கூறப்படுகிறது. இதனால் தரைவழி மின்கேபிள் பதிக்கும் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தால், அவர்களால் பணம் சம்பாதிக்க முடியாது. இதனாலேயே அவர்கள் சம்மந்தப்பட்ட திட்டத்தை செயல்படுத்த விடாமல் முட்டுக்கட்டை போட்டு வருவதாக கூறப்படுகிறது.

**– வீ.சிவசங்கரன்**

# காலியாகும் காமராஜர் திட்டம்!

மதிய உணவுத் திட்டம் என்பது ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சியில், சென்னை மாநகராட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம். அதை மாநிலம் முழுமைக்கும் பொதுமைப்படுத்தினார் காமராஜர். மாநில முதல்வர் தொடங்கி பள்ளி ஆசிரியர்கள் வரை ஒவ்வொரு ஊரிலும் உள்ள புரவலர்களைத் தேடித் தேடி அவர்களிடம் கையேந்தி நிதி திரட்டி உருவாக்கிய திட்டம் இது.

எம்ஜிஆர் முதல்வராகப் பொறுப்பேற்றபோது அதற்குச் சத்துணவுத் திட்டம் என்ற புதிய பெயரைச் சூட்டி, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சத்துணவு தயாரிப்பதற்காக அமைப்பாளர்களையும் சமையல் உதவியாளர்களையும் நியமித்தார். சத்துணவு ஊழியர் நியமனத்திலும்கூட கருணைகாட்டினார். மறைந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினர், கணவனை இழந்தோர், கைவிடப்பட்டோருக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்கள் சமைத்த உணவு அனைத்து மாணவர்களுக்கும் பரிமாறப்பட்டது. சத்தமில்லாமல் ஒரு சமத்துவப் புரட்சியும் நடந்தேறியது.

பள்ளிக்கூடத்தில் உள்ள அனைத்து ஏழைக் குழந்தைகளுக்கும் உணவு அளிக்கும் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே நிதிநெருக்கடியைச் சந்தித்தது. 1982-83ல் தமிழக அரசின் மொத்த வரி வருமானம் ரூ.844 கோடி. அதில் ரூ.140 கோடி சத்துணவுத் திட்டத்துக்காகச் செலவானது. சத்துணவுத் திட்டம் தொடருமா இல்லை நிறுத்தப்படுமா என்ற கேள்வியெழுந்தபோதுதான் எம்ஜிஆர் அந்த முடிவை எடுக்கத் துணிந்தார். இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளைத் தனியுரிமையாக்கினார். டாஸ்மாக் என்று அழைக்கப்படும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தைத் தொடங்கி, அதன் வாயிலாக மது விற்பனையிலிருந்து வருமானம் கிடைக்கச்செய்தார்.

திமுகவிலிருந்து பிரிந்து அதிமுகவைத் தொடங்கியபோது எம்ஜிஆர் முன்வைத்த குற்றச்சாட்டுகளில் ஒன்று, திமுக மதுவிலக்கைக் கைவிட்டுவிட்டது என்பது. மதுவிலக்குப் பிரசாரத்துக்காகத் தன்னைப் பயன்படுத்திக்கொண்டு கடைசியில் அந்தக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார்களே என்ற வருத்தம் அவருக்கு இருந்தது. அந்த எம்ஜிஆர்தான் மதிய உணவுத் திட்டத்துக்காக வேறுவழியேயின்றி, அதிகாரிகளின் ஆலோசனையை ஏற்று கலால் வரி மூலமாகக் கிடைக்கும் வருமானத்துக்காக டாஸ்மாக் நிறுவனத்தைத் தொடங்கினார். இன்று நீதிமன்றங்கள், சாலையோரங்களில் மதுக் கடைகளை மூடுங்கள் என்று உத்தரவிட்ட பிறகும் தொடர்ந்து கடைகளைத் திறந்துகொண்டே இருக்கிறது தமிழக அரசு. ஆனால், எந்த நோக்கத்துக்காக டாஸ்மாக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கத்தையே அரசு மறந்துவிட்டது.

பள்ளிக்கூடங்களில் படிக்கிற மாணவர்களுக்கு மட்டும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை எம்ஜிஆர். இரண்டு முதல் ஐந்து வயதுள்ள குழந்தைகளும் அந்தப் பயனைப் பெற வேண்டும் என்பதற்காக அங்கன்வாடிகளையும் திறந்தார். இந்தத் திட்டத்தில் அவர் தீவிரக் கவனம் எடுத்துக்கொண்டதற்குக் காரணம், பசி என்றால் என்ன என்பதன் முழு அர்த்தமும் அவருக்குத் தெரியும் என்பதுதான். 1977-ல் முதல்வரானதும் நடந்த முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் எம்ஜிஆர் கேட்ட முதல் கேள்வி, 'இங்கிருப்பவர்களில் யாரேனும் இளம்வயதில் பட்டினியை அனுபவித்திருக்கிறீர்களா?' என்பதுதான். 'நான், பசித்த வயிற்றுக்குச் சொந்தக்காரன்' என்ற சுயஅறிமுகத்தோடுதான் அவர் பேசத் தொடங்கினார். எம்ஜிஆரின்



அரசியல் பார்வையையே இந்த ஒற்றை வாக்கியத்துக்குள் சுருக்கிவிட முடியும்.


எம்ஜிஆருக்குப் பிறகு கருணாநிதியும் ஜெயலலிதாவும் சத்துணவுத் திட்டத்தை மென்மேலும் வளர்த்தெடுத்தார்கள். 1989, 1996, 2006 என்று முதல்வராகப் பொறுப்பேற்ற ஒவ்வொரு முறையும் சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்தினார் கருணாநிதி. வாரத்தில் ஐந்து நாட்கள் முட்டைகள் வழங்கவும், முட்டையை விரும்பாத மாணவர்களுக்கு வாழைப்பழம் மற்றும் சத்து மாவு வழங்கவும் உத்தரவிட்டவர் கருணாநிதி.

எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் 17,000 சத்துணவு மையங்கள் திறக்கப்பட்டன. 60 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்தார்கள். இன்று 43,205 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 51 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். சத்துணவு மையங்கள் அதிகரித்திருக்கின்றன. பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றன. ஆனால், இன்னும் சத்துணவுத் திட்டத்துக்கான தேவை இருக்கிறது.

பழனிசாமி தலைமையிலான தமிழக அரசால் சமீபத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 3,894 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. இப்போது, 8,000 சத்துணவு மையங்கள் மூடப்பட இருக்கின்றன. போதுமான மாணவர்கள் இல்லை என்பது ஆசிரியர் பணியிடங்கள் நீக்கத்துக்குக் காரணமாகவும் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பது சத்துணவு மையங்களை மூடுவதற்கான காரணமாகவும் சொல்லப்படுகின்றன. கல்வித் துறை தனியார்மயமாகிவரும் சூழலில், அடித்தட்டு மக்கள் கல்வி பெறுவதற்கான கடைசி வாய்ப்பையும் பறிக்கும் முயற்சிகள் இவை.

"சத்துணவுத் திட்டத்துக்குப் போதுமான நிதியில்லை என்றால் பிச்சையெடுக்கவும் தயாராக இருக்கிறேன்" என்றார் எம்ஜிஆர். காமராஜர் அதைத்தான் செய்தார். தமிழக அரசு நிதிநெருக்கடியில் தத்தளிக்கிறது என்பது தெரிந்த விஷயம்தான். அதற்காக சத்துணவுத் திட்டத்தில் கை வைப்பது தவறான முடிவு. காமராஜரைப் போல, எம்ஜிஆரைப் போல நீங்களும் கையேந்தத் தயாராகுங்கள் முதல்வரே, பசித்த வயிறுகள் உங்களை வாழ்த்தும், வரலாறு போற்றும்!

– ஆ. மவுரியன்



# நோய் வரக் காரணங்கள்

நோயாளிகளை அணுகும் விஷயத்தில், “நோய் என்ன என்பதை மட்டும் மதிப்பிடாதே, நோய் யாருக்கு இருக்கிறது என்பதையும் பார்” எனும் பழமொழியைப் பின்பற்றுவது நலம். ஒரே நோய், வெவ்வேறு நபர்களிடம், வெவ்வேறு விதமான உணர்வு வெளிப்பாட்டை உருவாக்கலாம். சொல்லப்போனால், நோயின் வெளிப்பாடு என்பது மனதால் நிர்ணயிக்கப்படும் விஷயம் எனலாம். பல மணி நேரத்துக்கு, எந்த அசைவுமில்லாமல் இருக்கும் சாத்தியம் கொண்ட துறவிகளை நாம் அறிவோம். ரமண மகரிஷி தனது கையில் உருவாகியிருந்த புற்றுநோயை அகற்ற, புலன்களின் முழுமையான கட்டுப்பாடு, தியானம், மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில், மயக்க மருந்து இல்லாமலேயே அறுவைச் சிகிச்சை நடத்த ஒப்புக்கொண்டார் என்று சொல்லப்படுவதுண்டு.

அதீத துயரத்திலும் அதிர்ச்சியிலும் இருப்பவர்கள், மாரடைப்பைப் போல் இதயத்தில் கடுமையான பாதிப்பை (‘உடைந்த இதய நோய்க்குறி’) உணர்ந்த சம்பவங்கள் உண்டு. இதை ஜப்பானிய மொழியில் டகாஸ்டுமோ என்பார்கள். தலைவலி என்பது பொதுவான ஒரு பிரச்சினை. பல சமயங்களில் அது ஒற்றைத் தலைவலி (மைக்ரேன்) எனும் நரம்பியல் நோய்க்குறியின் முத்திரை அதில் பொருத்திப் பார்க்கப்படுகிறது. கவனமாக விசாரித்து, உடல் உறுப்பு சார்ந்த நோய் அல்ல என்பதை உறுதிப் படுத்திக்கொண்டால், வந்திருப்பது ‘பதற்றத் தலைவலி’தான் என்பது தெரியவரும். அமைதி குலைந்து காணப்படும் வாழ்க்கைத்துணை, அடிக்கடி தலைவலிப்பதாகச் சொல்வதையும், தலைவலியைக் காரணம் காட்டி வாக்குவாதங் களிலிருந்து வெளியேறுவதையும் பார்த்திருப்பீர்கள்.

பலவீனமான குடல் கொண்ட ஒருவர், ஒரு கடினமான சூழலை எதிர்கொள்ளும் போதெல்லாம் கழிப்பறைக்குச் செல்வதைச் சிறந்த உதாரணமாகச் சொல்லலாம். தேர்வெழுதச் செல்லும் ஒரு மாணவர், குறுக்கு விசாரணைக்காக ஆஜராக வேண்டியிருக்கும் சாட்சி என்று இதற்குப் பலரை உதாரணமாகக் காட்டலாம். ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா இன்னொரு உதாரணம். ஆஸ்துமா பாதிப்புக்கு ஒருவரது மனநிலை முக்கியப் பங்கு வகிக்கிறது. ரோஜாப்பூவால் ஒவ்வாமையை அடையும் ஒருவரிடம், தாளால் செய்யப்பட்ட செயற்கை ரோஜாவைக் காட்டினாலே அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்படுவதை உதாரணமாகச் சொல்லலாம்.

பிரெஞ்சு மருத்துவரான ட்ரூஸோவுக்குக் குதிரை உடலில் இருக்கும் செதில்கள் ஒவ்வாமையை ஏற்படுத்திவிடும். குதிரை வண்டியில் சாலையில் செல்லும்போது வண்டி ஓட்டுநருடன் குதிரை லாயத்தில் அமைதியாக இருக்கும்போதும் ஆஸ்துமா பிரச்சினை இருக்காது. ஆனால், குதிரை லாயத்தில் இருக்கும்போது வண்டி ஓட்டுநர் மீது கோபம் கொண்டால், அவருக்கு ஆஸ்துமா பாதிப்பு உருவாகிவிடும். இரண்டாம் உலகப் போரின்போது, ஐரோப்பாவில் ‘ஏர் ரெய்டு ப்ளீடிங்’ எனும் பாதிப்பு கணிசமாக அதிகரித்தது. வான்வழித் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் உள்ளிட்டவற்றின் காரணமாக, பொதுமக்களிடையே இயல்பாகவே பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது. டாம் எனும் போர் வீரரின் உடல்நிலையை, குறிப்பாக வயிற்றின் உட்புறச் சுவரை இரண்டு ஐரோப்பிய மருத்துவர்கள் ஆராய்ந்தனர்.

அவர் அடிவயிற்றுச் சுவரிலும் வயிற்றிலும் துப்பாக்கி ரவை ஏற்படுத்திய துளை இருந்தது. டாம் கோபமாக இருக்கும் சமயங்களில், அவரது வயிற்றின் உட்புறச் சுவரின் இயக்கத்தில் மாறுபாடும், நெருக்கடித்தன்மையும் ஏற்படுவதை மருத்துவர்கள் இருவரும் கண்டறிந்தனர். அவர் மன அழுத்தத்தில் இருந்த தருணங்களில் வயிற்றின் சுவர், வெளிரிய நிறத்தை அடைந்ததும்,

அமைதியாக இருந்தபோது அது சாதாரண நிலையில் இருந்ததும் தெரியவந்தது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு நோயாளியை அணுகும் விஷயத்தில், அவருக்கான மருந்துகளைத் தீர்மானிக்கும்போது அவரது பின்னணியைக் கருத்தில்கொள்ள வேண்டும். தனது நோய் தொடர்பாக அவர் சொல்லும் அனுபவங்களை வைத்து அவரது குணாதியசம் தொடர்பாக ஒரு சித்திரத்தை மருத்துவர் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

நோயாளியின் ஆளுமை வெளிப்படையாகத் தெரியவில்லை என்றால் அவரது குணாதியசம், வாழ்க்கைச் சூழல் போன்றவற்றை அவர் தனியாக இருக்கும்போது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் தனது வாழ்க்கைத் துணையின் நடத்தை காரணமாக மன வேதனை அடையும்போதோ அல்லது தனது மாமியார் மீது கட்டுக்கடங்காத கோபம் அடையும்போதோ மடைதிறந்த வெள்ளமாக உணர்வுகள் எப்படி வெளிப்படுகின்றன என்பது ஆச்சரியமானது. எனினும், அன்றாட வாழ்வில் இவர்கள் தங்கள் உணர்வுகள் மீது திரையிட்டு வைத்திருப்பதுடன், மனவோட்டம் கடுமையாக எதிர்வினை செய்யும்போது வாந்தி, தலைவலி ஆகிய உடல் அறிகுறிகள் மூலம் நோய் உருவாகுமாறு செய்துவிடுகிறார்கள்.

முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி பற்றிய சம்பவம் ஒன்றை விவரிக்கிறார் அமெரிக்க எழுத்தாளரான நார்மன் கஸின்ஸ். ஒவ்வொரு நாளும் மருத்துவப் படைசூழ வந்து, நோயாளி தொடர்பான அன்றாடக் குறிப்புகளை வாசித்து ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டுச் சென்றுவிடும் மருத்துவரால் கடுமையாக விரக்தியடைந்திருந்தார் அந்த நோயாளி. ஒரு கட்டத்தில் கடும் விரக்தியடைந்தார். ஒரு நாள் அறைக்குள் மருத்துவர் நுழைந்தபோது, “டாக்டர், தயவுசெய்து நில்லுங்கள். நாள் முழுவதும் இந்த அறையில் தனியாகக் கிடக்கிறேன். நான் எதிர்பார்த்துக் காத்திருப்பது உங்கள் வருகைக்காகத்தான். நீங்களோ வந்து பார்த்துவிட்டு உடனே சென்றுவிடுகிறீர்கள். ஆறுதல் வார்த்தைகளைச் சொல்வதேயில்லை” என்று சொல்லிவிட்டார். பின்னர், மருத்துவமனையிலிருந்து தானே டிஸ்சார்ஜ் செய்துகொண்டு, ஒரு சொகுசு விடுதியில் அறையெடுத்துத் தங்கினார். ஏகப்பட்ட நண்பர்கள் புடைசூழ, இசை கேட்டுக்கொண்டு இன்பமாக இருந்தார். அவரது நோய் குறையத் தொடங்கியது. மகிழ்ச்சியான மனது அந்தத் தந்திரத்தைச் செய்தது!

அதேசமயம், எல்லா நோய்களும் மகிழ்ச்சியான, அமைதியான மனநிலையால் குணமாகிவிடுவதில்லை. ஒரு நல்ல மருத்துவர் நோய்க்குச் சிகிச்சையளிக்கிறார், ஒரு சிறந்த மருத்துவரோ நோயாளிக்குச் சிகிச்சையளிக்கிறார்!

**- V. அருணாசலம்**



ஒரு பக்க சிறுகதை

# எதுவுமே செய்யக்கூடாது!

ஒரு வைத்தியரும் அவருடைய மனைவியும் காட்டில் நீண்ட நாட்களாக எதையோ தேடிக்கொண்டிருந்தனர்.

கணவர் என்ன தேடுகிறார் என்று மனைவிக்கு தெரியாது. வையத்தியரும் சொன்னதில்லை. மனைவியின் வேலை அலைந்து திரிந்து வரும் கணவருக்கு உணவு சமைத்து வைப்பது, பரிமாறுவது, கைகால்கள் அமுக்குவது போன்ற பணிவிடைகள் தான். இப்படியே பல ஆண்டுகள் கழிந்து இருவருமே வயதாகி விட்டனர். ஆனாலும் தேடுவதை நிறுத்தவில்லை.

ஒருநாள் வைத்தியர் வழக்கம் போல காட்டுக்குள் அலைந்து திரிந்து விட்டு வரும்போது அங்கே மனைவியைக் காணவில்லை.

மாறாக இளம்பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். வையித்தியரை பார்த்ததும் சாஸ்டாங்கமாக விழுந்து சேவித்தாள். வைத்தியருக்கு ஒன்றும் புரியவில்லை.

"யாரம்மா நீ" என்று கேட்டார்.

அதற்கு அந்த யுவதி "நான்தான் உங்கள் மனைவி" என்றாள்.

வைத்தியருக்கு மிகவும் குழப்பம். என்ன நடந்தது என்று கேட்க மனைவி நடந்ததை சொல்ல ஆரம்பித்தாள்.

"உங்களுக்காக கூழ் காய்த்து கொண்டிருந்தேன். காய்ச்சிய கூழை கலக்கும் கரண்டி உடைந்து விட்டது. அதனால் அங்கே கிடந்த ஒரு குச்சியை எடுத்து கலக்கினேன். கூழ் மொத்தமும் கருப்பாகி விட்டது. அந்த கூழை இறக்கி வைத்து விட்டு வேறு கூழ் காய்ச்சினேன். நீங்கள் வர தாமதமானதும் கருகி கிடந்த கூழை நான் குடித்து விட்டேன். குடித்த அரை நாழிகையில் எனது முதுமை போய் இப்படி இளைம் பெண் ஆகிவிட்டேன்" என்றாள்

வைத்தியர் பதறி அடித்துபோய் "எங்கே அந்த குச்சி? இதை தானே நான் இத்தனை ஆண்டாக தேடிக்கொண்டிருந்தேன்"

என்று கேட்க அதற்கு அந்த மனைவி "அதை தான் நான் அடுத்த கூழ் காய்ச்சும்போது அடுப்பில் வைத்து எரித்து விட்டேனே" என்றாள்.

வைத்தியர் நெஞ்சடைத்து மயங்கி சாய்ந்தார்.

நீதி 1.பெண்டாட்டிக்கு தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது..

நீதி 2. அப்படி செஞ்சால் பொண்டாட்டிக்கு தான் லாபம்.. நமக்கு எப்பவுமே அல்வா தான்...



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Makkal Visaranai Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed , at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

உண்மை துணிவு நேர்மை

# அரசியல் தீர்ப்பு

சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்



MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything












No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**